**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 274 நாள்: 07.07.2026

**தேனாம்பேட்டை மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (07.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட சி.பி.ராமசாமி தெருவில் உள்ள அம்மா உணவகம், இளஞ்சிறார்களுக்கான ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையக் கட்டடப் பணி, சமூக நலக் கூடக் கட்டடப் பணி, அமுதம் பல்பொருள் அங்காடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணி, வார்டு-125க்குட்பட்ட ஆரியபுரம் பகுதியில் வணிக வளாகம் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அம்மா உணவகத்தில் உணவுப்பொருட்களின் இருப்பு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், சமையலறையினை தூய்மையாக பராமரித்திடவும், நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணி, சீரமைப்புப் பணி, கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர் (பொ) திரு.க.வரதராஜன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**